# அஸ்பெஸ்டாஸ் பதில்கள்

**அஸ்பெஸ்டாஸ் என்பது, உங்கள் வீட்டில் காணப்படக்கூடியதோர் பயங்கரமான பொருளாகும். உங்கள் குடும்பத்தின் மற்றும் சமுதாயத்தின் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடிகிற வகையில், அஸ்பெஸ்டாஸ் என்பது என்ன என்பதையும், அது எங்கெங்கே இருக்கலாம் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்வது முக்கியமானதாகும்.**

**உங்கள் வீட்டைப் புதுப்பிப்பது குறித்து நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் இத்தகவல் குறிப்பாக முக்கியமானதாகும்.**

## 1 அஸ்பெஸ்டாஸ் என்றால் என்ன?

அஸ்பெஸ்டாஸ் என்பது சுற்றுச்சூழலில் இயற்கையாகவே ஏற்படுகிறதோர் தாதுவாகும். இது, மிக நுண்ணிய இழைகளாகத் (ஃபைபர்களாகத்) தோன்றுகிறது, இவற்றை வெறும் கண்களினால் பார்க்க முடியாது. இவை மூச்சு வழியாக உடலுக்குள் சென்று விடும் பட்சத்தில் உங்களைச் சுகவீனமடையச் செய்து விட முடியும்.

அஸ்பெஸ்டாஸ் இழைகள் அநேக கட்டிடப் பொருட்களில் சேர்க்கப்படுகின்றன, ஏனென்றால் இவை அவற்றை வலுப்படுத்த உதவி, அதே நேரத்தில், மேம்பட்ட அளவில் வெப்பம் கடத்தாமலும் மற்றும் வெப்ப-எதிர்ப்புப் பண்புகள் உட்பட மற்ற பலன்களையும் வழங்கியுள்ளன.

சில நேரங்களில் இவ்விழைகள் சிமெண்ட், வினைல் மற்றும் மற்ற பொருட்களோடு பிணைக்கப்படுகின்றன அவை அவ்விழைகளைச் சூழ்ந்தமைந்து கொள்கின்றன - இவை தான் நொறுங்காதவை என்றறியப்படுகின்றன, மேலும் இவை தான் வீட்டுப் பராமரிப்பிலும், புதுப்பிப்புத் திட்டங்களிலும் நீங்கள் எதிர்கொள்கிற மிகவும் பொதுவான அஸ்பெஸ்டாஸ் பொருட்களாகும். சமுதாயத்தில் இப்பொருட்களுக்கான பொதுவான பெயர்களில் அடங்குபவை: ஃபைப்ரோ, சூப்பர் சிக்ஸ் மற்றும் பாண்டட் அஸ்பெஸ்டாஸ்.

அஸ்பெஸ்டாஸ் நம்மிடம் இருக்கையிலேயே நாம் எவ்விதம் தொடர்ந்து பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது என வரும் போது அதிலுள்ள வித்தை(ட்ரிக்) என்பது, எந்தெந்தக் கட்டிடப் பொருட்களில் இவ்விழைகள் சேர்க்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வதும், அவை நம்மீது படும் போது உரிய கவனம் எடுத்துக் கொள்வதுமேயாகும்.

## 2 அஸ்பெஸ்டாஸ் குறித்து நான் எப்போது கவலையடைய வேண்டும்?

உங்கள் வீடும், குறிப்பாக அதற்குள் உள்ள அஸ்பெஸ்டாஸ் கொண்டுள்ள பொருட்களும் நன்கு பராமரிக்கப்படுகின்றன என்றால், பிரச்சினையில்லை.

உங்கள் வீட்டில் உள்ள அஸ்பெஸ்டாஸ் சேதமடைந்து விடும் போது (அஸ்பெஸ்டாஸ் இழைகள் வெளியிடப்படும் அளவிற்கு) அல்லது வீட்டைப் புதுப்பிக்கும் ஒரு திட்டத்தில் நீங்கள் இறங்குவது குறித்து நினைக்கும் போது நீங்கள் கவலையடைய வேண்டும்.

## 3 அஸ்பெஸ்டாஸ் இழைகள் என்னை எவ்விதம் சுகவீனமாக்க முடியும்?

அஸ்பெஸ்டாஸ் இழைகளை நீங்கள் மூச்சில் உள்ளிழுத்து விடும் போது அவை உங்களை சுகவீனமாக்கி விட முடியும். அது தான் ஒரே வழி! அந்த இழைகளை நன்கு-பராமரிக்கப்படுகிற கட்டிடப் பொருட்களில் புதைத்து வைப்பீர்கள் என்றால் அப்போது அது உங்களுக்குப் பாதுகாப்பானதாகும்.

இவற்றை மூச்சில் உள்ளிழுத்ததும், இவை நுரையீரல்களில் உள்ள மிகச் சிறிய காற்றுக் குழாய்களுக்குள் நுழைந்து, அங்குள்ள நுரையீரல் திசுக்களின் மேல் படிந்து, அதன் காரணமாக (பத்து இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட) அஸ்பெஸ்டாஸ் தொடர்பான நோய் தோன்றுவதில் போய் முடிந்து விடலாம். இந்நோய்களில் பலவற்றைக் குணப்படுத்த முடிவதில்லை.

## 4 எனது வீட்டில் அஸ்பெஸ்டாஸ் இருக்க முடியுமா?

உங்கள் வீடு 1990 ஆம் ஆண்டிற்கு முன்பாகக் கட்டப்பட்டதென்றால், அஸ்பெஸ்டாஸ் இழைகளையுடைய கட்டுமானப் பொருட்கள் சில அக்கட்டிடத்தில் இருப்பதற்கு அதிகம் வாய்ப்புள்ளது (1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு, அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவானதே இருந்தும் அவை இருப்பதற்கு சாத்தியமுள்ளது!). கட்டிடப் பொருட்களில் அஸ்பெஸ்டாஸ் உபயோகிப்பது என்பது 1989 ஆம் ஆண்டிலிருந்தே தடை செய்யப்பட்டது மேலும் 2003 டிசம்பர் 31 ஆம் தேதியிலிருந்து, அஸ்பெஸ்டாஸின் எந்த வடிவத்தையும் உற்பத்தி செய்வது, மறு உபயோகம் செய்வது, விற்பனை செய்வது அல்லது இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.

உங்கள் வீடுகளில் நீங்கள் காணும் அஸ்பெஸ்டாஸ்-கொண்டுள்ள மிகவும் பொதுவான பொருட்கள் நொறுங்காத வகையைச் சேர்ந்தவையாகும் - அதாவது, அவை திடப் பட்டகங்களாக பிணைக்கப்பட்டவையாகும். இப்பொருட்களை, மேற்கூரையாகவும், வெளிப்புற அலங்காரமாகவும், உட்புற சுவர் மறைப்பாகவும், தாழ்வாரமாகவும், சுவரில் ஒட்டும் பலகை & பக்க மறைப்புகளாகவும், நெருப்புள்ள பகுதிகளைச் சுற்றிலும் அமைத்துள்ள வெப்ப மறைப்பாகவும், தண்ணீர் மற்றும் புகைக் குழாய்களாகவும், மற்றும் மின்சாரப் பலகைகளுக்குப் பின்புலமாகவும் உபயோகிக்கவுமே வாய்ப்புள்ளது.

அஸ்பெஸ்டாஸ் கொண்டுள்ள கட்டிடப் பொருட்கள் குறித்த சில படங்களைப் பார்க்க **www.asbestosawareness.com.au** என்ற இணையதளத்திற்கு சென்று பாருங்கள்.

## 5 எனது வீட்டில் அஸ்பெஸ்டாஸ் இருக்கிறது என்பதை நான் எப்படி உறுதியாகத் தெரிந்து கொள்வது?

ஒரு கட்டுமானப் பொருளில் அஸ்பெஸ்டாஸ் இழைகள் இருக்கின்றன என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்வதற்கான ஒரே வழி என்பது சான்றுபெற்றதோர் பரிசோதனை செய்யும் மையத்தை வைத்து அதனைப் பரிசோதனை செய்து பார்த்து விடுவதேயாகும். ஒரு கட்டுமானப் பொருளில் அஸ்பெஸ்டாஸ் இருக்கிறதா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், அதில் அஸ்பெஸ்டாஸ் இருக்கிறது என்பதைப் போலவே நினைத்துக் கொள்ளுங்கள்...பின்னொரு நாளில் அதனை நினைத்து வருந்துவதை விட பாதுகாப்பாக இருந்து கொள்வதே மேல்!

## 6 பிணைத்த அஸ்பெஸ்டாஸை எனது வீட்டிலிருந்து அகற்றுவதற்கு எனக்கு அனுமதியுண்டா?

எந்த அளவுள்ள அஸ்பெஸ்டாஸையும் வீட்டிலிருந்து அகற்றுவதற்கு உரிமம் பெற்றதோர் ஒப்பந்ததாரரை நீங்கள் உபயோகிக்க வேண்டும் என்பதே எப்போதும் சிபாரிசு செய்யப்படுகிறது; ஆயினும், உண்மையான பதில் என்பது - அது அளவைப் பொருத்தது என்பதேயாகும்.

அஸ்பெஸ்டாஸ் தகடு போட்டுள்ள பகுதி 10 சதுர மீட்டர்களுக்கும் குறைவானதாக இருந்தால், அப்போது அதனை நீங்களே அகற்றிக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.


நீங்கள் அகற்றியெடுக்க வேண்டிய அஸ்பெஸ்டாஸ் தகடு போட்டுள்ள பகுதி 10 சதுர மீட்டர்களுக்கும் அதிகமானதாக இருந்தால், அப்போது அதற்கான பதில் அகற்றக்கூடாது என்பதேயாகும் - அதனை நீங்களே அகற்றிவிடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்த அளவிலுள்ள வேலையைச் செய்வதற்காக உரிமம் பெற்றதோர் ஒப்பந்ததாரரை நீங்கள் வரவழைத்தாக வேண்டும். அது தான் விதியாகும்!



அஸ்பெஸ்டாஸ் பதித்துள்ள பகுதிகள் / தாழ்வாரங்கள் உள்ள கிளாசிக் ஃபைப்ரோ வீடு



பொதுவான அஸ்பெஸ்டாஸ் மேற்கூரை



சிற்சிறு பள்ளங்களையுடைய மேற்தோற்றம் அஸ்பெஸ்டாஸ் இருப்பதைச் சுட்டிக்காட்டலாம்

## 7 அஸ்பெஸ்டாஸை அகற்றுவதற்கான மிகப் பாதுகாப்பான வழி என்ன?

எந்த அளவுள்ள அஸ்பெஸ்டாஸையும் அகற்றுவதற்கான மிகப் பாதுகாப்பான வழி என்பது, அதற்கேற்ற உரிமம் பெற்றதோர் தொழில் நிபுணரை வரவழைத்து, உங்களுக்காக அவர் அவ்வேலையைச் செய்து தரச் செய்வதேயாகும். உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்கள் குறித்ததோர் பட்டியலைக் காண, வருகை தாருங்கள்: www.workcover.nsw.gov.au

ஆயினும், உங்களிடம் 10 சதுர மீட்டர்களை விடக் குறைவான அஸ்பெஸ்டாஸ் கூரையிடப்பட்டுள்ள பகுதியே இருந்து, அதனை அகற்றுவதற்கான வேலையை நீங்களே மேற்கொள்ள முடிவு செய்தால், அப்போது அதற்கான சரியான பாதுகாப்புச் சாதனங்களை அணிந்து கொண்டு, அதன் பின் செய்யக்கூடாதவை குறித்ததோர் நீண்ட பட்டியலைப் படித்துப் பார்த்து, அதற்கேற்ப உங்களைப் பழக்கிக் கொண்டாக வேண்டும்! அஸ்பெஸ்டாஸில் துளையிடவோ, அதனை வெட்டவோ, கீழே போடவோ, தேய்க்கவோ, அறுக்கவோ, உடைக்கவோ, சுரண்டவோ, உரசவோ, கழற்றவோ அல்லது தண்ணீர் அடித்து சுத்தம் செய்யவோ செய்யாதீர்கள்.

அவ்வேலையை நீங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக, இன்னும் அதிகத் தகவல்களுக்கு வருகை தாருங்கள்: www.asbestosawareness.com.au

## 8 நான் அஸ்பெஸ்டாஸை எனது குப்பைத் தொட்டியில் போடலாமா அல்லது அதனை நகர்மன்றம் சுத்தம் செய்வதற்காக வெளியே போட்டு விடலாமா?

நிச்சயமாகப் போடக் கூடாது! நீங்கள் ஒருபோதும் அஸ்பெஸ்டாஸை உங்கள் நகர்மன்றக் குப்பைக் கூடைகளிலோ அல்லது நகர்மன்றம் சுத்தம் செய்வதற்காக வெளியிலோ போடக் கூடாது.

## 9 அஸ்பெஸ்டாஸை நான் எவ்விதம் அப்புறப்படுத்தலாம்?

அஸ்பெஸ்டாஸை சட்ட ரீதியாக அப்புறப்படுத்துவதற்கான ஒரே வழி என்பது:

- அஸ்பெஸ்டாஸ் கழிவைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமம் பெற்றுள்ளதோர் கழிவு மேலாண்மை மையத்திற்கு அதனை அனுப்பி வைப்பதேயாகும் (உங்கள் பகுதியில் உள்ள கழிவு மேலாண்மை இடங்கள் குறித்ததோர் பட்டியலைப் பார்க்க www.epa.nsw.gov.au என்ற இணையதளத்தில் சென்று பாருங்கள்)
- அக்கழிவைச் சேகரித்துச் செல்ல, உரிமம் பெற்றதோர் கட்டிட இடிமான நிறுவனம் / அஸ்பெஸ்டாஸ் அகற்றும் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்
- உங்களுக்கு உதவி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் உங்கள் பகுதி நகர்மன்றத்தினரிடம் இருக்கிறதா எனப் பார்க்க அவர்களைத் தொலைபேசியில் அழைத்துக் கேளுங்கள்.

## 10 நான் ஒரு NSW வீட்டுவசதிக் குடியிருப்பில் வசிக்கிறேன். சேதமடைந்துள்ள சில அஸ்பெஸ்டாஸ்களைப் பொருத்த மட்டில் நான் என்ன செய்ய முடியும்?

உங்கள் NSW வீட்டுவசதிக் குடியிருப்பில் உள்ள சில அஸ்பெஸ்டாஸின் நிலை குறித்து நீங்கள் கவலையடைகிறீர்கள் என்றால், நீங்கள் 1300 468 7464 என்ற எண்ணில் NSW வீட்டுவசதி வாரியத்தைத் தொடர்பு கொண்டு உங்கள் கவலையை அவர்களிடம் அறிவிக்க வேண்டும். அவ்விஷயம் குறித்து விசாரணை செய்யப்பட்டு, தேவையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படும்.

## 11 நான் தனிப்பட்ட விதத்தில் குத்தகைக்கு எடுத்துள்ளதோர் சொத்தில் உள்ள சில அஸ்பெஸ்டாஸின் நிலை குறித்து நான் கவலையடைகிறேன். அதனை பழுதுபார்ப்பதற்கான உரிமைகள் எதுவும் எனக்குள்ளனவா?

ஒரு தனியார் வாடகை குடியிருப்பாளர் என்ற முறையில், வசிப்பிட வாடகைக் குடியிருப்புச் சட்டம் 2010 மற்றும் வசிப்பிட வாடகைக் குடியிருப்புகள் ஒழுங்குமுறை 2010 ஆகிய சட்டங்களின் கீழ் அஸ்பெஸ்டாஸ் சம்பந்தமாக உங்களுக்கு உரிமைகள் இருக்கத் தான் செய்கின்றன. இன்னும் அதிகத் தகவல்களுக்கு இந்த இணையதளத்திற்குச் சென்று பாருங்கள்: www.tenants.org.au

## 12 எனது பகுதி நகர்மன்றத்தை நான் எப்போது அழைக்க வேண்டும்?

பின்வரும் நிலையில் நீங்கள் உடனே உங்கள் பகுதி நகர்மன்றத்தை அழைத்துவிட வேண்டும்:

- அஸ்பெஸ்டாஸ் குப்பைபோல் குவித்து வைத்துள்ளதைக் காணும் போது
- உங்கள் வீட்டிலிருந்து கொஞ்சம் அஸ்பெஸ்டாஸை அகற்ற விரும்புகிறீர்கள் ஆனால் அதற்கு முதலில் அனுமதி தேவையா என்பது உங்களுக்குத் தெரியவில்லை என்றால்
- சமுதாயத்தில் ஒருவர் அஸ்பெஸ்டாஸை அகற்றும் விதம் குறித்துக் கவலையடைகிறீர்கள் என்றால்
- அடிப்படையான அஸ்பெஸ்டாஸ் அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் குறித்த ஆலோசனை தேவைப்படும் போது
- உங்களுக்கு உதவக்கூடியதோர் தொழில் நிபுணரை எவ்விதம் கண்டுபிடிப்பது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ள நிலையில்
- அஸ்பெஸ்டாஸ் குறித்து இன்னும் அதிகமான பொதுத் தகவல்கள் தேவைப்படும் போது.

நாங்கள் எப்போதுமே உங்களுக்கு உதவுவதற்கு எங்களால் முடிந்ததைச் செய்வோம், ஆகவே எங்களை அழைக்கத் தயங்காதீர்கள்.



பாதுகாப்பாக அஸ்பெஸ்டாஸை அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது*



பழுது பார்க்க வேண்டிய நிலையில் உள்ள அஸ்பெஸ்டாஸ் வேலி*



அஸ்பெஸ்டாஸ் கொண்டுள்ள சேதமடைந்த வினைல் தள ஓடுகள்*

*புகைப்பட உதவி, அஸ்பெஸ்டாஸ் எஜுக்கேஷன் கமிட்டி.

**இன்னும் அதிகத் தகவல்களுக்கு அல்லது அஸ்பெஸ்டாஸ் அகற்றுவதில் ஈடுபடுகிற எந்தவொரு திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதற்கான அனுமதி உங்களுக்குத் தேவையில்லை என்பதை உறுதி செய்து கொள்ள, உங்கள் பகுதி நகர்மன்றத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். வழக்கமாகவே இதற்கு மொழிபெயர்ப்பாளர் சேவைகள் கிடைக்கின்றன.**

**மற்ற முக்கியமான தொடர்பாளர்கள்**

NSW **சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி** - 131 555
**ஒர்க கவர்** NSW - 13 10 50
**கம்பேலண்ட் சைப்** - 02 8757 9000

இந்த உண்மைகள் அடங்கிய தாளில் உள்ள தகவல்களைப் பொதுப் பார்வை வளம் ஒன்றாகவே கம்பலேண்ட் சபை வினியோகம் செய்கிறது. உரிய கவனத்தையும் அக்கறையையும் செலுத்தி, நன்னம்பிக்கையின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது. பயனர்கள் வழங்கியுள்ள தகவல்களை அவரவரது தனித்துவமான சூழ்நிலைக்குத் தக்கபடி பயன்படுத்துவது குறித்து அவர்களே திருப்தியடைந்து கொண்டு, தேவைப்படுகிற நேரங்களில் நிபுணர் ஆலோசனையை நாட வேண்டும்.

CUMBERLAND COUNCIL